# உலகில் இனி வரபோவதென்ன ?

புகழ் பெற்ற ஒரு ஜோதிடர் ,ஒரு பெரிய பட்டணத்திற்கு புறப்பட்டு சென்றார் .அந்த பெரிய பட்டணத்திலே அவர், இந்த பட்டணத்திற்கு நேரிடபோகிற காரியங்களை குறித்து ஒன்று சொல்லபோகிறேன் என்று ஒரு விளம்பரம் கொடுத்தார். அந்த ஜோதிடர் என்ன சொல்ல போகிறார் என்று மக்கள் அவர் இருந்த அந்த மைதானத்தில் திரளாய் கூடி நின்றனர். அப்பொழுது அந்த ஜோதிடர் ,நான் என்ன பேச போகிறேன் என்பதை குறித்து யாருக்காகிலும் தெரிந்தால் தங்களது கைகளை உயர்த்துமாறு கேட்டுகொண்டார். ஆனால் அங்கு யாரும் தங்கள் கைகளை உயர்த்தவில்லை. நான் என்ன பேச போகிறேன் என்பதை குறித்து யாருக்கும் தெரியவில்லை, பிறகு நான் பேசி என்ன பயன் என்று சொல்லி தன் பேச்சை முடித்துகொண்டார். இரண்டாவது நாள் அங்கு கூட்டம் கூடினது. அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து, இந்த முறை அந்த ஜோதிடர் திரும்ப அதே கேள்வியை கேட்டால் நாம் யாவரும் கைகளை உயர்த்துவோம் என்று பேசிகொண்டார்கள். திரும்பவும் அந்த ஜோதிடர் நான் என்ன பேச போகிறேன் என்பதை குறித்து யாருக்காகிலும் தெரிந்தால் தங்களது கைகளை உயர்த்துமாறு கேட்டுகொண்டார். அப்பொழுது எல்லோரும் கைகளை உயர்த்தினார்கள். நான் என்ன பேச போகிறேன் என்பதை குறித்து உங்களுக்கு தெரியுமே , பிறகு நான் பேசி என்ன பயன் என்று சொல்லி தன் பேச்சை முடித்துகொண்டார். மூன்றாவது நாள் அங்கு கூட்டம் கூடினது. அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து, இந்த முறை அந்த ஜோதிடர் திரும்ப அதே கேள்வியை கேட்டால் நாம் பாதி பேர் கைகளை உயர்த்துவோம் மற்ற பாதி பேர் கைகளை உயர்த்தவேண்டாம் என்று பேசிகொண்டார்கள். திரும்பவும் அந்த ஜோதிடர் நான் என்ன பேச போகிறேன் என்பதை குறித்து யாருக்காகிலும் தெரிந்தால் தங்களது கைகளை உயர்த்துமாறு கேட்டுகொண்டார். உடனே அங்கு பாதி பேர் தங்கள் கைகளை உயர்த்தினார்கள். நான் என்ன பேச போகிறேன் என்பதை குறித்து உங்களுக்குள் பாதி பேருக்கு தெரியுமே, அதனால் நீங்கள் தெரியாத மற்ற பாதி பேருக்கு நான் என்ன பேச போகிறேன் என்பதை குறித்து சொல்லி விடுங்கள் என்று கூட்டத்தை முடித்து கொண்டார்.
வேத புத்தகத்தில் கூறுகிற தீர்க்கதரிசனங்கள் இந்த கதையைபோல் அல்ல.
நம்முடைய திருமறை நமக்கு என்ன சொல்லுகிறது ?

**10 . அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளைல்லாம் செய்வேன் என்று சொல்லி**

**11 . உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனை தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம்பண்ணினேன். அதைச் செய்து முடிப்பேன்.** - ஏசாயா : 46 .10, 11

ஆண்டவர் சொல்லும் வார்த்தைகள் என்றும் பொய்யாகாது. அந்த வார்த்தைகள் மிக திட்டவட்டமானவைகள், அவருடைய தீர்க்கதரிசன வசனங்கள் துள்ளியமாக பல நிறைவேறிவிட்டன. இனி நிறைவேறபோகிற தீர்க்கதரிசன வசனங்கள் சமீபித்து வருகிறதை தேவ மக்கள் இன்றே விசுவாசிக்கிறார்கள்.
புதிய ஏற்பாட்டிலே இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனத்தை குறித்து என்ன சொல்லுகிறார் ?

**17 . நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.**

**18 . வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.** -மத்தேயு : 5. 17, 18

எவ்வளவு திட்டவட்டமாகவும் உறுதியாகவும் கர்த்தர் நமக்கு சொல்லுகிறார் !

இன்று உலகத்தில் அறிவும் ஞானமும் ஏராளமாக பெருகியிருக்கிறது! இதை நாம் ஒத்துகொள்ளதான் வேண்டும். இதை குறித்து ஆண்டவர் அன்றே தீர்க்கதரிசனமாக சொல்லிவிட்டார்.

**தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப்புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்குமங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்.** -

தானியேல் 12. 4



இந்த கடைசிக்காலத்திலே அறிவு மிக பிரமாண்டமாக பெறுகிவருகிறதை நாம் பார்த்துகொண்டுதான் இருக்கிறோம். இன்று விஞ்ஞானம், பௌதீகம், சரித்திரம் வானசாஸ்திரம் என்பதெல்லாம் பெருகியிருக்கிற இந்த காலத்திலே , கர்த்தர் கொடுத்த தீர்க்கதரிசன வசனங்களை ஆராயமுடியாமல் போகிறார்கள்.

**இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.** -வெளி 1. 3

இந்த தீர்க்கதரிசன வசனங்களை நாம் விசுவாசிப்போமானால் நமக்கு ஆண்டவர் ஒரு விசேஷமான ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு முன் கூட்டியே நடக்கபோகிற காரியங்களை குறித்து வர போகிற அழிவுக்கு தப்பித்து கொள்ளும்படி பெரும் கிருபையோடு நமக்கு அளிக்கும் கர்த்தருடைய பெரிதான ஈவுதான் இந்த தீர்க்கதரிசனங்கள் ! இவைகளை விசுவாசித்து கைக்கொண்டால் நமக்கு எல்லாவற்றிலும் விடுதலையுண்டு.

**கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.** - ஆமோஸ் 3. 7

எவ்வளவு பெரிதான தயவு , கிருபை , அன்பு நம்மீது வைத்திருக்கிறார் ! அவருடைய இரகசியத்தை தமது பிள்ளைகளுக்கு மிகுந்த பாசத்தோடு வெளிப்படுத்துகிறார்.

**நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? -ஆதி** 18. 18

ஒரு தகப்பனாய் இங்கு பேசுகிறார். ஆபிரகாமை எந்தளவாய் அவர் நேசிக்கிறார் என்பதை பாருங்கள்! ஆபிரகாமும் ஆண்டவருக்கு கீழ்ப்படிந்திருந்தான். அவருடைய சத்தியத்தில் நாமும் பங்குகொண்டால், அதன் படி நடந்தால் , நம்மையும் ஆபிரகாமை போல ஆண்டவர் நேசிப்பாரல்லவா? ஆகவே கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்தவேதத்தை படித்து விசுவாசிக்கும்போது நாம் அவருக்குள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் மாறுகிறோம்!

கர்த்தருடைய தீர்க்கதரிசன வசனங்களை நாம் விசுவாசித்து



அவர் சொன்ன வார்த்தைகளின்படி நடந்தால், நாம் கர்த்தருக்குள் வெளிச்சமுள்ள பிள்ளைகளாய் இருப்போம். தீங்கு நம்மை அணுகாது வாதை நம்மை மேற்கொள்ளாது.

இனி உலகத்தில் சம்பவிக்கபோகிற காரியங்களை குறித்து நாம் சற்று தியானிப்போம்.

## உலகில் இனி வரப்போவதென்ன?

இந்த உலகத்தின் கடைசிக்காலத்தை பற்றி ஆண்டவர் வேதத்தில் அநேக இடங்களில் பேசியிருக்கிறார்.

**எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்.** லூக்கா 21. 20

இயேசுவின் சீஷர்கள் அவரிடம் அங்குள்ள தேவாலயத்தை காட்டி வர்ணித்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஆண்டவர் சொன்னதாவது: இந்த தேவாலயத்தை பார்க்கிறீர்களே, அந்த ஆலயம் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடி இடிக்கப்பட்டுபோகும் என்று

சொன்னார். இதை கேட்டவுடனே சீஷர்களுக்கு ஒரு பயம் உண்டாயிற்று. அவர்கள் இந்த தேவாலயம் அழியுமானால் இந்த உலகமே அழிந்துவிடும் என்று நம்பினார்கள். அப்பொழுது அவர்கள் ஆண்டவரிடத்தில் என்ன கேள்வி கேட்டார்கள்?

**பின்பு, அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.**
-மத்தேயு 24.3

இந்த உலகத்தினுடைய முடிவின் அடையாளத்தையும் எருசலேமின் அழிவின் அடையாளத்தையும் ஆண்டவர் ஒருமித்து சொன்னார். அந்த எருசலேமின் அழிவின் அடையாளத்தை பற்றி சொல்லும்போது எருசலேம்



சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். என்று சொன்னார். கிறிஸ்துவிற்கு பின் எழுபதாவது ஆண்டில் டைட்டஸ் என்ற ரோம சேனைதலைவன் ஒரு பெரிய சேனையோடு வந்து எருசலேம் நகரை முற்றுகைபோட்டான். கிறிஸ்துவுக்கு பின்பு எழுபதாவது ஆண்டில் எருசலேம் நகரத்தின் கதவுகள் அடைக்கப்பட்டது. ஆண்டவர் இதைகுறித்து மீண்டும் என்ன சொல்லுகிறார்?

**அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள்.** -லூக்கா 21.21

அங்கு சேனைகள் முற்றுகைபோட்டுவிட்டது, கர்த்தரோ மலைகளுக்கு ஓடி போங்கள் என்று சொல்லுகிறாரே என்ன செய்வது என்று சீஷர்கள் யோசித்துகொண்டிருந்தார்கள். மூன்று நாட்கள் கழித்து அந்த சேனை இன்னொரு கலகத்தை அடக்குவதற்காக வேறொரு இடத்திற்கு போய்விட்டது. அந்த நேரத்தை பயன்படுத்திகொண்டு தேவனுடைய பிள்ளைகள் தருணம் இதுதான் என்று சொல்லி, தன்னுடைய உடமைகளை எடுத்து கொண்டு வேகமாக அந்த நகரத்தை விட்டு வெளியேறினார்கள். அதிக தூரம் அவர்கள் செல்லாமல் எட்டு மைலுக்கு அடுத்து இருக்கும் பெல்லா என்ற ஒரு சிறு பட்டணத்திற்கு போய் சேர்ந்தபொழுது, முற்றுகையிட்டு நீங்கின அந்த படை திரும்ப வந்து எருசலேமை சூழ்ந்து கொண்டது. அந்த படை அறுபது லட்ச யூதர்களை கொன்று போட்டது. அந்த பட்டணம் முழவதும் இடிக்கப்பட்டது, அந்த தேவாலயம் ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடி இடிக்கப்பட்டது.









அந்த அறுபது லட்ச யூதர்களில் ஆண்டவரை விசுவாசித்த ஒருவர்கூட அங்கு சாகவில்லை. இந்த உலகத்தின் அழிவு மிக சீக்கிரத்தில் வரபோகிறது. வருகிற அழிவுக்கு நாம் தப்பவேண்டும் என்றால் பரிசுத்த வேதத்தில் இருக்கிற தீர்க்கதரிசன வசனங்களை நாம் மிக பலத்தோடு உறுதியாக விசுவாசிக்கவேண்டும்.


**11. துமாவின் பாரம். சேயீரிலிருந்து என்னை நோக்கி: ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது? என்று கூப்பிட்டுக் கேட்க;**

**12. அதற்கு ஜாமக்காரன்: விடியற்காலம் வருகிறது இராக்காலமும் வருகிறது; நீங்கள் கேட்க மனதால் திரும்பிவந்து கேளுங்கள் என்று சொல்லுகிறான். -ஏசாயா 21. 11, 12**

இன்று நம்முடைய கேள்வி, இரவு எவ்வளவு நேரம் சென்றது? விடிவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது? இந்த உலகத்தின் அந்தகாரம் எப்பொழுது வரபோகிறது? இந்த உலகத்தின் முடிவு எப்பொழுது வரபோகிறது? இன்னும் எவ்வளவு நாட்களும் நேரமும் இருக்கிறது? ஆண்டவர் இந்த உலகத்தில் வந்து தம்முடைய இராஜியத்தை ஸ்தாபிக்க போகிற அந்த விடியற்காலம் எப்பொழுது வரபோகிறது? என்ற கேள்விகள் நமக்கு இருக்கிறது. இதற்கு வேதத்தில் மிக விளக்கமாக ஆண்டவர் பதில் சொல்லுகிறார். இந்த உலகத்தின் துவக்கத்தின் சரித்திரத்திலே கிமு 2231 - ஆம் ஆண்டில் நிம்ராட் என்ற ஒரு அரசன் பாபிலோன் என்ற சாம்ராஜியத்தை ஸ்தாபித்தான். பின்பு அங்கு




சாரகன் என்று சொல்லப்பட்ட ஒரு அரசன் தன் சாம்ராஜியத்தை ஸ்தாபித்தான். பின்பு அசீரிய ராஜாக்கள் அங்கு வந்தார்கள். அடுத்து நேபுப்பலாசா என்ற ஒரு ராஜா நியோ பாபிலோன் சாம்ராஜியத்தை கிமு 606-ல் ஸ்தாபித்தான். அவனுடைய மகனாகிய நேபுகாத்நேச்சார் பாபிலோன் சாம்ராஜியத்தை திடப்படுத்தி பலப்படுத்தி பெரிய சாம்ராஜியமாக மாற்றினான். அது ஒரு செழிப்பான சாம்ராஜியம். பொன்னும், பொருளும், பெரும்வீரர்கள் நிறைந்த ஒரு சாம்ராஜியம். அந்த மன்னன் தன்னுடைய இராஜியத்திற்கு ஒரு தலைநகரை கட்டினான்.



-பாபிலோன்

அதற்கு பாபிலோன் என்று பெயர். அந்த நகரம் 15 மைல் நீளம் ,15 மைல் அகலமுள்ள ஒரு நகரம் . அந்த நகரத்தை அவன் சிறப்பாக கட்டினான். பெலஸ் என்று சொல்லப்பட்ட ஒரு தேவதைக்கு கோவிலை கட்டினான்.



**கோவில் உட்புறம்**

7

அந்த கோவில் 3 மைல் சுற்றலவிலுள்ளது. 8 மைல் சுற்றலவிலுள்ள ஒரு அரண்மனையை அவன் கட்டினான். அந்த அரண்மனைக்கிற்கும் கோவிலுக்கும் நடுவில் ஒரு நதியிருந்ததால் அதற்கு கீழே ஒரு சுரங்கத்தை வெட்டினான். இப்படிப்பட்ட பிரமாண்டங்களை அவன் தன் பாபிலோன் ராஜியத்திலே அமைத்தான். இப்படியாக இருந்த அவன் உள்ளத்திலே ஒரு கேள்வி எழும்பிற்று. ஒரு நாள் அந்த பாபிலோனை சுற்றி பார்த்து தனக்கு பிறகு தன்னுடைய வம்சங்கள் எல்லாம் தன்னைபோல சிறப்பாக அரசாளுவார்களா ? இந்த பாபிலோன் ராஜியம் என்றைக்கும் நிலைநிற்குமா? என்ற ஒரு பெரிய கேள்வி அவன் உள்ளத்திலே எழும்பினது. இந்த நேரத்திலே பரலோகத்தின் தேவன் அவனுக்கு விடையளித்தார். அந்த அரசனுக்கு ஆண்டவர் ஒரு சொப்பனத்தின் மூலம் விடையளித்தார்! மறுநாள் காலையிலே அவன் எல்லா ஞானிகளையும் கல்தேயர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் அழைப்பித்து தான் ஒரு சொப்பனம் கண்டதாகவும் அந்த ெப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் சொல்லும்படி கேட்டுக்கொண்டான். ( தானியேல் 2ம் அதிகாரம் முழவதுமாக படித்து பார்க்கவும்) . அவர்களோ

**11 . ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது; மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம்பண்ணாத தேவர்களேயொழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள்.** -தானியேல் 2. 11


அப்படியானால் இறைவனிடத்திலிருந்து வந்த அந்த சொப்பனத்தை மனிதர்களால் அறிவிக்கமுடியாது. மாமிசத்திலே வாசம்பண்ணாத தேவர்களே அதை அறிவிப்பார்கள்.

**12. இதினிமித்தம் ராஜா மகா கோபமும் உக்கிரமுங்கொண்டு, பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலைெ சய்யும்படி கட்டளையிட்டான்.** -தானியேல் 2. 12

அந்த ஞானிகளில் எபிரேய வாலிபர்களாகிய தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இருந்தார்கள். கொலை செய்யும்படி இவர்களையும் அழைத்து சென்றார்கள்.

8

அப்பொழுது தானியேல் ராஜாவிடத்தில் இந்த சொப்பனத்தை பற்றி சொல்ல தனக்கு மூன்று நாள் அவகாசம் கொடுக்குமாறு கேட்டுகொண்டு தனது நண்பர்களோடு ஜெபித்தான்.



**19 . பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது; அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்திரித்தான்.** -தானியேல் 2. 19

இந்த சொப்பனத்தை 5 வசனங்களிலே ஆண்டவர் எழுதியிருக்கிறார்.


31. ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக்கண்டீர்; அந்தப் பெரிய சிலை
மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதின்
ரூபம் பயங்கரமாயிருந்தது.

32. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின்
புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெ
ண்கலமும்,
33. அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி
களிமண்ணுமாயிருந்தது.
34. நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கைகளால் பெயர்க்கப்படாத
ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை
இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி அவைகளை நொ
றுக்கிப்போட்டது.

35. அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய்
நொறுங்குண்டு, கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற
பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை
அடித்துக்கொண்டுபோயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய
பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று.



36. சொப்பனம் இதுதான்; அதின் அர்த்தத்தையும் ராஜசமுகத்தில்
தெரிவிப்போம். - தானியேல் 2. 31-36




இந்த சிலை மூலமாக இனிமேல் வரபோகிற காரியங்களை குறித்து ஆண்டவர் அந்த நேபுகாத்நேச்சார் மூலமாக நமக்கு கொடுத்திருக்கிறார். அந்த பாபிலோன் அரசன் சிலை வணக்கம் உள்ளவன், அப்பொழுது அவன் அந்த சிலையை சொப்பனத்தில் கண்டபோது மிகவும் நடுங்கி கலங்கி போயிருந்தான். பிறகு தானியேல் அந்த சொப்பனத்தை விளக்கும்போது





38. சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும்
ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து,

**உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே. -தானியேல் 2. 38**

இங்கு அந்த பொன்னான தலை அந்த பாபிலோன் சாம்ராஜ்யத்தை குறிக்கிறது. இந்த பாபிலோனை பற்றி ஆண்டவர் இன்னொரு இடத்திலேயும் சொல்லுகிறார் 7. பாபிலோன் **கர்த்தருடைய** கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப்போனார்கள். -எரேமியா 51.7 . இந்த சாம்ராஜ்யம் கிமு 606 வது வருடத்திலிருந்து 538 வரை 68 வருடங்கள் ஆண்டது. கிமு என்று வரும்போது நாட்களை எப்படி எண்ணவேண்டுமென்றால் அதாவது கணக்கு பின்னாகதான் எண்ணிக்கொண்டுபோகவேண்டும். 606, 605, 604...
அந்த நாடு மிகவும் செழிப்பான நாடாக விளங்கியது. பொன் வெள்ளி நிறைந்த நாடாக இருந்தது. பெரிய அறிவாளிகள் அந்த நாட்டிலே வாழ்ந்தார்கள். அந்த நாட்டிலிருந்துதான் மார்க்கங்கள் வெளிப்பட்டது. நம்முடைய இந்து மார்க்கமானது பாபிலோனிய மார்த்தின் ஒரு கிளையாகும். மாந்திரீகம் ஜோதிடம் ஆருடம் வானசாஸ்த்திரம் கணிதம் எல்லாமே இந்த பாபிலோன் சாம்ராஜ்யத்திலிருந்து வந்தது. இந்த உலகத்திலேயே பொன்னரசு என்று சொன்னால் அது இந்த பாபிலோன் சாம்ராஜ்யம்தான். எவருமே அந்த பாபிலோன் நகரத்தை பிடிக்கமுடியாதபடி அதை கட்டியிருந்தார்கள். அந்த பாபிலோன் அரசு செங்கல்லை சுட்டு அதில் ((பாபிலோன் அரசு என்றைக்கும் நிற்கும் ))என்று எழதியிருந்தான். என்றன்றைக்கும் நிலைநிற்கும் என்று அவர்கள் நினைத்தார்கள். அந்த செங்கல்லை நான் அங்கு போனபோது பார்த்திருக்கிறேன். பிடிக்க முடியாது என்று நினைத்து கொண்ட அந்த பாபிலோன் சாம்ராஜ்யத்தை மேதிய பெர்சியர்கள் அந்த பட்டணத்தை பிடித்தார்கள். 31. மேதியனாகிய தரியு தன் அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தைக்கட்டிக்கொண்டான். தானியேல் 5.31 . அந்த பட்டணத்தை எப்படி பிடித்தார்களென்றால், அந்த பட்டணத்தின் வாசல்களை அடைத்துவிட்டால் யாருமே உள்ளே போகமுடியாது. 284 அடி உயரமுள்ள மதில்களால் கட்டப்பட்டது. அந்த மதில்கள் மேலே ஏழு ரதங்கள் போகுமளவும் இடமுண்டு. ஏற குறைய 100 அடி அகலமான மதில்களாக இருந்தது. ஏழு சுவர்கள் அங்கே கட்டப்பட்டிருந்தன. இந்த பாபிலோன் சாம்ராஜ்யத்தை எந்த சாம்ராஜ்யம் வந்து பிடிக்கும் என்று



ஆண்டவர் தானியேலுக்கு சொல்லுகிறார்.


20. நீ கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதியா பெர்சியா தேசங்களின் ராஜாக்கள்; -தானியேல் 8.20. அந்த ராஜாக்கள் எப்படி அந்த சாம்ராஜ்யத்தை பிடித்தார்கள் என்றால், அந்த பாபிலோனியர்கள் மர்தாக் என்ற ஒரு தெய்வத்தை அவர்கள் வணங்கிவந்தார்கள். அந்த தெய்வத்தின் பண்டிகை வந்தபோது அவர்கள் கதவுகள் யாவற்றையும் மூடிவிட்டு நன்றாக குடித்து வெறித்து ஆர்ப்பாட்டம் செய்து அந்த பண்டிகையை கொண்டாடினார்கள். எல்லோரும் குடி வெறியில் இருந்தபோது, அந்த பட்டணத்திற்கும் வெளியிலிருந்த அந்த நதிக்கும் கீழாக இருந்த சுரங்கபாதையின் வாசல் கதவை அடைக்க மறந்துபோனார்கள். அப்பொழுது மேதியனாகிய தரியு என்ற ஒரு ராஜா அந்த இப்ரடெஸ் நதியின் தண்ணீரை பக்கவாட்டில் பெரிய வாய்க்கால்களை வெட்டி அந்த தண்ணீரை திருப்பி ஒரு பெரிய ஏறிகுள்ளாக போகவிட்டான். அப்பொழுது அந்த பாபிலோனுக்கு முன்னான இடத்தில் தண்ணீர் வற்றிபோய் வெட்டாந்தரையாயிற்று. அன்று அந்த பட்டணத்தை பிடித்தார்கள். 7. பாபிலோன் **கர்த்தருடைய** கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப்போனார்கள். 8. பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது; அதற்காக அலறுங்கள்; அதின் நோயை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள்; ஒருவேளை குணமாகும் எரேமியா 51.7,8

**39. உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியை யெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யமொன்று எழும்பும். -தானியேல்-2.39**

தங்கத்திற்கு வெள்ளி எப்படி கீழ்த்தரமானதோ, அதேபோல இந்த இரண்டாம் ராஜ்யம் கீழ்த்தரமானது. அதுதான் மேதியா பெர்சியா. என்றாலும் அவர்கள் ஒரு பெரிய ராஜ்யத்தை கட்டியாண்டார்கள். அந்த நாட்டினுடைய வழக்கச்சொல் அவர்கள் இட்டதுதான் சட்டம், அதை மாற்றவோ அதை அழிக்கவோ முடியாது. இப்படியாக அவர்கள் அரசாண்டார்கள். அவர்களது அரசாட்சி கி. மு 539



லிருந்து 331 வரைக்கும் இருந்தது. அந்த ராஜ்யத்தை அரசாண்ட கடைசி அரசனான மூன்றாவது கேம்பஸீஸ் மீது மகா அலக்ஸாண்டர் படையெடுத்தான்.


மகா அலெக்ஸான்டர்

அந்த மகா அலக்ஸாண்டர் ஒரு வாலிபன், அவன் படையெடுக்கும்போது அவனுக்கு மூவாயிரம் சிப்பாய்கள்தான் இருந்தார்கள். அந்த கேம்பஸீஸ் என்ற மன்னன் முப்பதினாயிரம் படைகளோடு வந்தான். அவனுக்கு யானை படைகளும் , பெரிய கற்களை வீசகூடிய எந்திரங்களும் இருந்தன. அந்த மகா அலக்ஸாண்டர் வந்துக் கொண்டிருக்கும்போது எருசலேம் நரத்திற்கு வந்தான். அந்த நகரத்திலே அந்த தேவாலயத்தை அவன் பார்க்க ஆசைப்பட்டான். அந்த தேவாலயம் உன்னதமாகவும் சிறப்பாகவும் இருந்தது. அப்பொழுது யூதர்கள் எங்கே மகா அலக்ஸாண்டர் அந்த ஆயலத்தை அழித்து விடுவானோ என்று பயந்து அவர்கள் வெள்ளை உடுப்புகளை உடுத்திகொண்டு அவன் அங்கு வந்து சேர்ந்தபோது அவனுக்கு முன்பாக வணக்கம் செலுத்தினார்கள். பிரதான ஆசாரியன் அவனை அழைத்து கொண்டு அந்த ஆலயத்திற்குள்ளே கொண்டுபோனான். அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய தோள்சுரளை (வேத புத்தகம்) எடுத்து தானியேலின் 2 அதிகாரத்தை அவனுக்கு வாசித்துக்காட்டினான். இவைகள் யாவும் சரித்திரத்தில் எழதப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த இரண்டாம் அதிகாரத்தில் மூன்றாவது ராஜ்யம் ஒன்று எழும்பும் என்று குறிப்பிட்டு காட்டி அது உன்னுடைய ராஜ்யம்தான் என்று அந்த ஆசாரியன் அவனுக்கு



சொன்னான். தானியேல் 8 ம் அதிகாரத்திலே இதை பற்றி இன்னும் விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது. அது ஒரு கொம்பை பற்றியும் அதுதான் அலக்ஸாண்டர் என்றும் திட்டவட்டமாக தெரிகிறது. அவன் உள்ளத்திலே ஒரு பெரிய போர் வெறியிருந்தது. தேவனே சொல்லிவிட்டார் என்று ஒரு பெரிய நம்பிக்கையுடன் மூவாயிரம் படைவீரர்களோடு வந்து போர் செய்து அந்த மேதியா பெர்சியர்கள் மீது அரபெல்லா என்ற இடத்திலே 331 ம் ஆண்டில் வெற்றிகொண்டு தன்னுடைய கிரேக்க சாம்ராஜ்யத்தை நிறுத்தினான். இந்த கிரேக்கராஜ்யம் அதாவது அந்த மகா அலக்ஸாண்டர் 5 ஆண்டுகுள்ளாக இந்தியாவரை படையெடுத்து வந்தான். பல தேசங்களை அவன் பிடித்தான். அந்த நாளிலே உலகத்தின் பெரும் பகுதியை அலக்ஸாண்டர் பிடித்து அவன் சாம்ராஜ்யத்தை நிலைக்கப்பண்ணினான். பின்பு அந்த மகா அலக்ஸாண்டரை ரோமர்கள் பிட்னா என்ற இடத்திலே அவனை முறியடித்து தங்களுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். கி. மு 331 லிருந்து 168 ஆண்டு வரைக்கும் இந்த கிரேக்க ராஜ்யம் 163 வருஷமாக அரசாண்டுவந்தது. ரோமராஜ்யம் வரும்போது இரும்பை போல உரமுள்ளதாக இருக்கும் என்று ஆண்டவர் சொல்லிவிட்டார்.

இவர்கள் எங்கெல்லாம் படையெடுத்து போனார்களோ, அங்கெல்லாம் மக்களையும் கட்டடங்களையும் நொறுக்கி தரைமட்டமாக்கினார்கள். தங்களுக்கு விரோதமாக வருகிற எந்த ஜாதியையும் முழவதுமாக அழித்தார்கள். 174 வது ஆண்டிலே இப்போபொலிடஸ் என்ற சொல்லப்பட்ட ஒரு சரித்திரக்காரன் சொன்னதாவது: தானியலே நீ சந்தோஷப்படு, நீ சொன்னதில் எந்தவித தவறுமில்லை, இப்பொழுது அந்த இரும்பை போன்ற ராஜ்யம் ஆண்டுகொண்டிருக்கிறது என்று எழிதினான். கிப்பன் என்று சொல்லப்பட்ட ஒரு சரித்திர ஆசிரியன் சொன்னதாவது: அந்த சிலையிலே காணப்பட்டபடி அந்த வெண்கல ராஜ்யம் ரோம ராஜ்யத்தினால் முறியடிக்கப்பட்டு ஆளுகிறது என்று எழுதினான். அந்த ரோம ராஜ்யம் 600 வருஷம் ஆண்டது. இங்கு வேதம் நாளாவது ராஜ்யம் பிரிக்கப்படும் என்று சொல்லிற்று. ஆகவே இந்த ரோம சாம்ராஜ்யத்தை



வடக்கிலிருந்து வந்த ஜெர்மானிய பார்பேரியன்கள் அதிகமாக அடிக்கடி படையெடுத்து ரோமராஜ்யத்தை ஒன்றுமில்லாமல் ஆக்கினார்கள். காலில் பத்து விரல்கள் இருப்பதுபோல பத்தாக பிரிந்தது அந்த ரோமராஜ்யம்.



**பாதங்களும் கால்விரல்களும் பாதிகுயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும்; ஆனாலும் களிமண் இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும்.**

-

**தானியேல் 2. 41**

இந்த பத்துராஜ்யங்கள் யாதெனில்: ப்ரான்ஸ் , சுவிட்சர்லான்ட்
போர்திகேள், ஜெர்மனி, பிரிட்டன், ஸ்பெயின், இத்தாலி . மற்ற மூன்று நாடுகள் எருளி, வான்டால்ஸ், ஆஸ்டகோஸ் என்ற மூன்று நாடுகளும் பிற்பாடு அழிந்துபோய்விட்டது. இந்த மூன்று நாடுகளும் வட ஆப்பிரிக்காவிலிருந்த ராஜ்யங்கள். ஆண்டவர் சொன்னபடி கால்களில் பத்து விரல்கள் பிரிந்துகிடப்பதுபோல பத்தாக அந்த ராஜ்யங்கள் பிரிந்தது. அந்த ராஜ்யங்கள் தான் இன்று வரை ஆண்டுகொண்டிருக்கிறது. கி. மு 476 ஆண்டிலிருந்து இந்த பிரிவுகள் வந்தது. இந்த பிரிவுகள்தான் பல பிரிவுகளாக மாறி எங்குபார்த்தாலும் சிதறிகிடக்கிறது. மற்றும் இந்த ராஜ்யங்கள் ஆண்டுகொண்டிருக்கும்போது சில நாடுகள் களிமண் போல பலவீனமாக இருக்கும், சில நாடுகள் இரும்பை போல உரமுள்ளதாக இருக்கும் என்று தேவன் சொல்லுகிறார். ஆகவே இந்த நாடுகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளாது.

**நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு**



**கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள். -தானி 2. 43**

ஆகவே இந்த ஐரோப்பா நாடுகளை ஒன்று சேர்க்க ஆறு பெரிய மனிதர்கள் மிகவும் பிரயாசப்பட்டார்கள். ஒன்பதாவது நூற்றாண்டிலே சார்லி மேக்னே என்ற ஒரு ராஜா 25 வருஷக்காலமாக சண்டையிட்டு இந்த ஐரோப்பாவை ஒன்று படுத்தவேண்டுமென்று பிரயாசப்பட்டார். அவராலே முடியாமல் தோற்றுபோனார் என்று சரித்திரம் சொல்லுகிறது. அடுத்து 16 வது நூற்றாண்டிலே சார்லஸ் என்ற மன்னன் ஐரோப்பா

முழவதையும் ஜெயிப்பதற்கு அநேக ஆண்டுகள் பிரயாசப்பட்டு தோற்றுபோனான். இந்த மன்னனுக்கு பாப்பு அரசர் சக்கரவர்த்தியாக முடிசூட்டினார். அடுத்து 18 வது நூற்றாண்டிலே பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 14 வது லூயி என்ற மன்னன் பெரிய செல்வந்தனாகவும் பெரிய படைகளையும் கொண்டவனாக இருந்தான். அவன் ஐரோப்பா நாடுகளை ஒன்று சேர்க்க பிரயாசப்பட்டு தோற்றுபோனான். அடுத்து 19 வது நூற்றாண்டிலே நெப்போலியன் என்ற மன்னன் ஐரோப்பா நாடுகளை ஏறகுறைய பிடித்துவிட்டார். கடைசியாக ரஷியா மீது மதியீனமாக குளிர்காலத்திலே படையெடுத்து 1812 வது ஆண்டிலே தோல்வியடைந்தான். அவனை எல்பா என்ற தீவிலே நாடு கடத்தி அங்கு அநாதையாக மறித்துபோனான் என்று சரித்திரம் சொல்லுகிறது. அடுத்து முதலாவது மகா யுத்தத்திலே கேசர் வில்கம் என்பவன் எழும்பி ஐரோப்பா நாடுகளை ஒன்றுசேர்த்துவிடவேண்டும் என்று பெரிய போர் கொடுத்து நான்கு ஆண்டுகளாக 1914-1918 பிரயாசப்பட்டு தோற்றுபோனான். பிறகு நம்முடைய காலத்திலே இரண்டாவது உலக யுத்தத்திலே இருந்த ஹிட்லர் 1939-1945 வரை எப்படியாவது ஐரோப்பா நாடுகளை ஒன்றுசேர்த்துவிடவேண்டும் என்று அவனுடைய படைகள், போர் விமானங்கள் ஐரோப்பா நாடுகள் முழவதுமாக வந்தது. இங்கிலாந்து நாட்டை தவிர மற்ற ஐரோப்பா நாடுகளை ஏறகுறையாக பிடித்துவிட்டான். ஆனாலும் அவர்கள் ஒன்றோடொன்று ஒட்டி கொள்ளாமல் இருப்பார்கள் என்று கர்த்தர் சொன்னபடி அங்கு அந்த திட்டத்தில் ஹிட்லர் தோற்றுபோனான். இன்றைக்கு வரைக்கும் ஐரோப்பா நாடுகள் ஒன்று சேராமலே இருக்கிறது. இனிமேலும் அது



ஒன்று சேராது. இந்த கடைசி நாட்களிலே பரலோகத்தின் தேவன் இந்த உலகத்திலே தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று வேதம் வெகு விளக்கமாக சொல்லுகிறது. வேத வசனங்கள் எவ்வளவு துள்ளியமாக நிறைவேறி வருகிறதை நாம் மிக கவனத்தோடு கூர்ந்து கவனிக்கவேண்டும்.

**இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான்.** -தானி 2.45

தீர்க்கதரிசனங்கள் ஒருநாளும் பொய்யாக போகாது என்று நாம் மிக நுட்பமாக அறிந்துகொள்ளவேண்டும். ஐந்து சாம்ராஜ்யத்தை குறித்து ஆண்டவர் ஐந்தே வசனங்களில் சொல்லிவிட்டார். பரலோகத்தின் தேவன் இந்த உலகத்தின் சரித்திரத்தை முன்னதாகவே அறிந்து, நடக்க போகிற காரியங்களை குறித்து நமக்கு அறிவிக்கிறார். இந்த உலக சரித்திரத்தை மட்மல்ல, நம்முடைய வாழ்கையையும் ஆண்டவர் அறிவார். நமக்கு நாளை நடக்கபோகிற காரியத்தையும் அவர் அறிவார். ஆகவே நாம் அவருடைய சத்தியத்திலே உறுதுணையாக நின்று, நம்மையும் நம்முடைய பிள்ளைகளையும் அவருக்காக கொடுத்து, அவர் நமக்கு நித்திய ஜீவனை கொடுக்க நாம் மிக மிக பிரயாசப்படவேண்டும்.

**அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையில்பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும்**

**வெண்கலத்தையும் களிமண்ணையும்வெண்கலத்தையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். - தானி 2.44**

இதோ இப்பொழுதிருக்கிற இந்த ராஜ்யம் ஆண்டவர் அனுப்புகிற கல்லினால் நொறுக்கி போடப்படபோகிறது. அவர் தம்முடைய நித்திய ராஜயத்தை நிலைக்கப்பண்ணபோகிறார். அவர் மிக சீக்கிரத்திலே வரபோகிறார் என்பதற்குறிய பல அடையாளங்கள்எழும்பிக்கொண்டிருக்கிறது. ஆண்டவருடைய கல்வாரி சிலுவை கொல்கதா மலையிலே



நாட்டப்பட்டது. அவரோடுகூட இரண்டு திருடர்களை சிலுவையில் அறைந்தார்கள். யூதர்கள் சுயட்சைக்காக சண்டைபோட்டார்கள், தங்களுடைய நாடு விடுதலை பெற வேண்டும் என்று சண்டைபோட்டார்கள். அந்த சண்டை போட்ட வீரர்களின் தலைவர்கள் தான் அந்த இயேசுவோடு தொங்கின இரு கள்ளர்கள். இருவரும் ஆண்டவரை பார்த்து கேலி செய்தார்கள். தேவ ஆவியானவர் ஒரு கள்ளனின் இருதயத்திலே வேலை செய்தார். அந்த கள்ளன் ஆண்டவரை பற்றி தெரிந்தவன், அவருடைய வார்த்தைகளை கேட்டு மனதிலே குத்துண்டவனாக , இயேசு அண்டசராசரத்தின் தேவன் என்பதை அறிந்து கொண்ட அந்த கள்ளன்

**42 . இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.**

**43 .இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். -லூாக்கா 23. 42, 43.**



எப்பேர்ப்பட்ட விசவாசம் வைத்திருந்தான் ! அவரை ஆண்டவரே என்று சொல்லிவிட்டான். இதை விட ஒரு விசுவாசம் என்ன இருக்கிறது? ஒரு கள்ளன் சிலுவையில் அடிக்கப்பட்டு துன்பப்பட்டு



கொண்டிருக்கும் சமயத்திலே இயேசுவை நோக்கி ஆண்டவரே நீர் வரும்போது என்னை நினைத்தருளும் என்று தன்னை அவருக்கு ஒப்புகொடுத்துவிட்டான். அவருடைய ராஜ்யத்தை அவர் ஸ்தாபிக்க வரும்போது நாம் அவருடனே கூட இருக்க இன்றே முயற்சி எடுப்போம். இதை படிக்கும் ஒவ்வொரு தேவ பிள்ளைகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

